DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 844/2020** |
| Deposition of Witness for | : PW 9 |
| Name | : திரு.அன்னலட்சுமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 06.07.2026. |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 06 July 2026**.**

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.

முதல்விசாரணை:

நான் தற்போது தென்காசி மாவட்ட பொருளாதார குற்றப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சங்கரன்கோவில் தாலுகா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்த போது, குற்ற எண். 245/2017-ன் 457, 380,511 IPC ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, தலைமைக்காவலர் தங்கதுரை என்பவர் மேல்விசாரணைக்காக என்

பார்வைக்கு வழக்கு கோப்பினை சமர்ப்பித்தார். வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துகொண்ட நான் கடநத் 21.10.2017-ம் தேதி 19.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் குருநாதன் மற்றும் செல்வக்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ 4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் சுயம்பு, துரைராஜ், ஜோன்ஸ் ஜோப், சேகர், கந்தசாமி, குருநாதன், செல்வகுமார் மற்றும் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த தலைமை காவலராக தங்கதுரை ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை தேடிவந்த நிலையில் எதிரி 24.10.2017-ம் தேதி 9.30 மணிக்கு செந்தமிழ் ஐ.டி.ஐ முன்பு சங்கரன்கோவில் - திருவேங்கடம் ரோட்டில் வாகனம் தனிக்கையில் இருந்தபோது, TN 79 A 1576 Honda dream என்ற இருசக்கர வாகனத்தில் வந்த நபரை சந்தேகத்தில் விசாரிக்க அவர் சாட்சிகள் சேகர் மற்றம் கந்தசாமி ஆகியோர் முன்னிலையில் எதிரி எந்தவிட அச்சுறுத்தலும், ஆசை வார்த்தையும் கூறாமல் அவராகவே தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதன் பின்பு எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி இருசக்கர வாகனத்தையும் தான் வைத்திருக்கும் கருப்புநிற Shoulder பேக்கில் அன்று அணிந்திருந்த உடைகளான தொப்பி, கர்சீப், பேண்ட், மற்றும் முதல் நாள் அணிந்திருந்த சர்ட் அதோடு சுத்தியல், டெஸ்டர்-2, கட்டிங் பிளேடு, கட்டர் ஆகியவகைளை எடுத்து ஆஜர் படுத்துகிறேன் என எதிரி கொடுத்த **ஒப்புதல் வாக்குமூலம் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6 ஆகும்**. மேற்படி

ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் மேற்படி பொருட்களை அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். **அந்த அத்தாட்சி அ.சா.ஆ.7 ஆகும்**. அதன் பின்பு அத்தாட்சி மூலம் கைப்பற்றிய 1) TN 79 A 1576 Honda dream 2) கருப்பு கலர் சோல்டர் பேக், 3) மரக்கைபிடியுடன் கூடிய சுத்தியல், 4) பிளாஸ்டிக் கைபிடியுடன் கூடிய டேஸ்டர் சிறியது 1, பெரியது1, 5) பிளாஸ்டிக் கைபிடியுடன் கூடிய இருப்பு பாகத்தால் ஆன கட்டிங் பிளேடு–1 6) பிளாஸ்டிக் கைபிடியுடன் கூடிய இருப்பு பாகத்தால் ஆன கட்டர்–1, 7) Dark பிரவுன் கலர் தொப்பி, 8) சிமெண்ட், பிரவுன் கலர் கலந்த கர்சீப்–1, 9) வாடாமல்லி, ப்ளூகலர் கலந்த சட்டை–1, 10) லைட் பிரவுன் கலர் பேண்ட் – 1 ஆகிய 10 பொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றததிற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.8 ஆகும்**. அதே போன்று PUMA 16, 4.7 GB என்ற ஆரஞ் கலரில் எழுதப்பட்ட வெள்ளைநிற பிளாஸ்டிக் கவரால் மூடப்பட்ட சி.டி ஒன்று, படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அந்த **படிவம் 91 அ.சா.ஆ.9 ஆகும்**. மேற்படி படிவம் 91 அ.சா.ஆ.8–ல் உள்ள பொருட்களான 1) TN 79 A 1576 Honda dream என்ற வாகனம் **சா.பொ.1 ஆகும்**. 2) கருப்பு கலர் சோல்டர் பேக்,**சா.பொ.2 ஆகும்** 3) மரக்கைபிடியுடன் கூடிய சுத்தியல் **சா.பொ.3 ஆகும்** 4) பிளாஸ்டிக் கைபிடியுடன் கூடிய டேஸ்டர் சிறியது 1, பெரியது1, **சா.பொ.4 ஆகும்** 5) பிளாஸ்டிக் கைபிடியுடன் கூடிய இருப்பு பாகத்தால் ஆன கட்டிங் பிளேடு–1 **சா.பொ.5 ஆகும்** 6) பிளாஸ்டிக் கைபிடியுடன் கூடிய இருப்பு பாகத்தால் ஆன கட்டர்–1, **சா.பொ.6 ஆகும்** 7) Dark பிரவுன் கலர் தொப்பி, **சா.பொ.7 ஆகும்** 8) சிமெண்ட், பிரவுன் கலர் கலந்த கர்சீப்–1, **சா.பொ.8 ஆகும்** 9) வாடாமல்லி, ப்ளூகலர் கலந்த சட்டை–1, **சா.பொ.9**

**ஆகும்** 10) லைட் பிரவுன் கலர் பேண்ட் -1 **சா.பொ.10 ஆகும்**. **படிவம் 91-ல் அ.சா.ஆ.9-ல் உள்ள** PUMA 16, 4.7 GB என்ற ஆரஞ் கலரில் எழுதப்பட்ட வெள்ளைநிற பிளாஸ்டிக் கவரால் மூடப்பட்ட சி.டி ஒன்று **சா.பொ.11 ஆகும்**. மேற்படி எதிரி மீது அத்துடன் வழக்கு விசாரணை முடித்து 15.02.2018-ம் தேதி எதிரிகள் மீது இ.த.ச .பிரிவுகள் 457, 380, 511 IPC -ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இந்த வழக்கில் கோட்டியப்பன் என்பவரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். கோபி என்பவரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் ATM இருந்த இடத்திற்கான உரிமையாளர் யார் என்பதை காட்டக்கூடிய ஆவணத்தை நீதிமன்றத்தில் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரியை செந்தமிழ் ஐ.டி.ஐ-ன் முன்பாக வாகன தனிக்கையின்போது கைது செய்வதாக கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கின் மேற்படி ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து போலியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறிய நாள் நேரத்தில் புகார் மனுவைப் பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும், சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், அரசுதரப்பு சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும், எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், எதிரிகளிடம் இருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும், அத்தாட்சி மூலம்

கைப்பற்றப்படவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.